# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :26 April 2025*

கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief
**Dr PRIYAKRISHNAN**
Publisher

**MR P. JAYAKRISHNAN**
Editorial Board Members

**Dr V SELVAKUMAR**
Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**
School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**
Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**
Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**
Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**
Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின் பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


**திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்**
முனைவர் ச.வைத்தீஸ்வரன்

**திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்**
முனைவர் ஹ.விஜயலட்சுமி

**பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்**
ப.பிரபு

**திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்**
சா.ஜனார்த்தனன்

**சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்**
திருமதி நா.நித்யா

**நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்**
கி. ராஜ்குமார்

**தர்காவும் விளிம்புநிலை மக்களும்**
முனைவர் மௌ.அஸ்கர் அலி

**இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்**
முனைவர் நா. ஜிதேந்திரன்

**சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு**
ரா.சந்தியா

**ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'**
ரா.ஹேமா சிவகா

**கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்**
இரா.கலாவதி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்
ந.மஞ்சுளா

மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்
பத்மினி. S

EASY LEARNING TECHNIQUES
PROF. Dr. Er. S. HARI PRASAD

Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools
Kanapathipillai Gnanaretnam

A Comparative Study Of Formal And Non-formal Education Systems
Shiyani Thevaruban

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு

The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu
P.PRAVEENKUMAR

Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums
Dr. S.Udhaya Kumar.

தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்
முனைவர் செ. சாந்தி



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

**பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் ' திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி**

*The Emphasizing Fabrication Ethic in "Thirikatukam" the Morality Books of Pathinen Keezhkanakku*

**இரா.ஹேமலதா**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
(Ref.No:**47437/Ph.D.K8/Tamil/FT/Change of Guide/January 2013/Dt: 14.06.2024**)

முனைவர் **ம.இளையராஜா,**
ஆய்வு நெறியாளர், இணைப் பேராசிரியர் - துறைத்தலைவர்,
தமிழாய்வுத் துறை, அரசுக் கலைக் கல்லூரி, அரியலூர் 621 713.
**(பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது)**

**ஆய்வுச்சுருக்கம்**

செவ்வியல் என்பது classicism என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கம் ஆகும். தொன்மை, செம்மை, தாய்மை உள்ளிட்ட பண்புகள் கொண்ட பனுவல்களைச் செவ்வியல் இலக்கியம் என்று கூறுவர். தமிழில் நாற்பத்தொரு பனுவல்களைச் செவ்வியல் இலக்கியம் என்று இனங் கண்டுள்ளனர். அவை: தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, இறையனார் களவியல், முத்தொள்ளாயிரம் என்பனவாகும். இவை கி.மு.500 முதல் கி.பி.500 என்ற காலவரையில் தோன்றியவை. பதினெண் கீழ்க்கணக்கு என்பதில் அற இலக்கியம் சார்ந்தவை பதினோறு நூல்கள். அறநூல்கள் யாவும் இல்லறம் பற்றிய நெறிமுறைகளை எடுத்துக்கூறும் இயல்புடையவை. இல்லறம் மற்றும் துறவறம் என்ற இரண்டையும் வெவ்வேறு முறையில் இவை வெளிப்படுத்துகின்றன. இவை இரண்டும் தமிழ் அறநூல்களின் இலக்கியக் கொள்கைகள், கோட்பாடுகளில் அடங்குமாறும் காணப்படுகின்றன. கோட்பாடு — கொள்ளப்படுதல், கொள்கை என்ற பொருள்படும்.

**திறவுச்சொற்கள் (Keywords): அருந்ததி, இறவா புகழுடம்பு,** குடும்பம், **கெடுதி தவிர்த்தல், திரிகடுகம், தெப்பம் கைவிட்டவர், பேதைமை,** வாழ்வியல்.

*Abstract*

***Classic is the transcript of the word classicism. They are called classical literature, including antiquity, enthusiasm, and motherhood. In Tamil, forty -one panels have been identified as classical literature. They are: Tolkappiyam, Pattupattu, Eight, Eighteen Below, Silappadikaram, Manimekalai, Iyanar Field, Muttollairam. These appeared in the period from 500 BC to 500 BC. Eleven texts are the literary literature. The philosophies are natural to take the norms of homelessness. These are different in different ways. Both are found in the literary principles and principles of the Tamil Charity. The theory - the meaning of the principle.***

***Keywords: Arundhati, Marava Praise, Family, Gaddi Avoiding, Trikkadugam, Teppam Abandoned.***

**முன்னுரை**

சங்க இலக்கிய காலம் தொகை நூல்களின் காலமாகக் குறிக்கப்படுகிறது. வடிவப் பெருமையும், வகைமை உறவும் சிறந்த நூல்களில் இருந்து எட்டுத்தொகை எனவும், பத்துப்பாட்டு என்னும், உயரிய இலக்கியங்கள் தொகுத்து அளிக்கப்பட்டன. இவ்விலக்கிய தொடர்ச்சியில் இடைவெளி நிகழ்ந்தது என்பது இலக்கியங்கள் அறியச் செய்கின்றன. "கி.பி.100 முதல் கி.பி.500 வரை நீண்ட இந்தக் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் நீதி

நெறிகளை வலியுறுத்தி எழுந்தவை'' (சிற்பி பாலசுப்பிரமணியன் & நீல பத்மனாபன், ப.333) என்று குறிப்பிடுவர். இவை குறைந்த அடிவரை கொண்ட செய்யுட்களாக எழுதப்பட்டன. இந்தக் காலமே கீழ்க்கணக்கு காலம் அல்லது அறநெறிக் காலம் என அறியப்படுகிறது. இக்காலத்திற் எழுந்தவற்றுள் 1. ஆசாரக் கோவை, 2. இன்னா நாற்பது, 3. இனியவை நாற்பது, 4. ஏலாதி, 5. சிறுபஞ்சமூலம், 6. திரிகடுகம், 7. திருக்குறள், 8. நாலடியார், 9. நான்மணிக்கடிகை, 10. பழமொழி நானூறு, 11.முதுமொழிக் காஞ்சி ஆகியன அறநூல்களாகத் திகழ்கின்றன. அகத்திணை சார்ந்தவையாக 1.ஐந்திணை ஐம்பது, 2. ஐந்திணை எழுபது, 3.கைந்நிலை (இன்னிலை), 4. திணைமாலை நூற்றைம்பது, 5. திணைமொழி ஐம்பது, 6. கார் நாற்பது ஆகியவையும் புறம் சார்ந்ததாகக் களவழி நாற்பதும் ஆகிய பதினெட்டு நூல்களாகும். இப்பதினெட்டு நூல்களும் ஆய்வாளர் தம் முனைவர் பட்ட ஆய்வுக்குட்படுத்தும் மூல நூல்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆய்வுக் கட்டுரையில் ''வரையறை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்'' (பொற்கோ 81) என்ற கோட்பாட்டினை ஆய்வாளர் தம் கருத்தில் கொண்டு மேற்படி ஆய்வு மூலநூல்களில் அடங்கியவற்றுள் திரிகடுகம் நூலின்கண் 5 பாடல்கள் மட்டும், எடுத்துக் கொண்டு அதில் வலியுறுத்தப்படும் புணை நெறி (righteous conduct) பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது. புணை — ஆள் பொறுப்பு, உதவி, ஈடு, ஒப்பு, தெப்பம், மரக்கலம், மூங்கில், விலங்கு (ப.780) எனும் பொருள்களையும்; ''நெறி'' என்னும் பதத்திற்கு ஆளுகை, ஒழுக்கம், கண் மண்டைக்குழி, கோயில், குலம், குதிரை முதலியவற்றின் நடை, சமயம், சுருள், செய்யுள் நடை, தாழ்ப்பாள், வழி, வழிவகை, விதி, வீடுபேறு (ப.690) எனும் பொருள்களையும் தமிழ்-தமிழ் அகரமுதலி தருகின்றன.

**திரிகடுகம் - நூலமைப்பும் பொருண்மையும்**

இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட101 வெண்பாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பாடலின் மூன்றாம் அடியிலும் இம்மூன்றும் அல்லது இம்மூவர் என்னும் சொல்லாட்சி இடம்பெறுகின்றது. இதில் மனித உடலுக்கு மருந்தாகும் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் திரித்துப் பொடி செய்து கடுகுபோல் அமைந்த மருந்துப் பொருளுக்குத் திரிகடுகம் என்று பெயர். இந்தத் திரிகடுகம் உடலுக்கு மருந்தாவதுபோல் உயிருக்கு உறுதி நல்கும் மூன்றுவித கருத்துக்களையும் மூன்றுவித நபர்களையும் ஒவ்வொரு பாடலிலும் எடுத்துரைக்கின்றன. மூன்றுவித கருத்துக்கள் அமைந்தப் பாடல்கள் காப்பு உள்பட 67, மூன்றுவித நபர்கள் பற்றி அமைந்தப் பாடல்கள் 34 ஆக 101 வெண்பாக்கள் அமைந்துள்ளன. இவற்றில் யார் யார் என்னென்ன செய்யனும் செய்யக்கூடாது என்பதும்; என்னென்ன செயல் செய்யனும் செய்யக்கூடாது என்பதும்; மானிட வாழ்வில் மனிதர்கள் நெறிகளைப் (ஒழுக்கம்) பின்பற்றி வாழவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளன. இந்நூலின் சுருக்கமான வரலாறு பல நூல்களிலும் நூலாசிரியர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அபிதான சிந்தாமணி பின்வருமாறு குறிப்பிடுகிறது. ''திரிகடுகம் சங்கம் மருவிய நீதி நூலாகும். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று. இது நல்லாதனாரால் இயற்றப்பட்டது. மும்மூன்று பொருளை விளக்கும் வெண்பாக்கள் இதன்கண் அமைந்துள்ளன'' (சிங்காரவேலு முதலியார், பக்.997-998) என்று விளக்குகிறது.

**வாழ்வியல்**

வாழ்வியல் என்பது வாழ்வின் இலக்கணம் என்ற பொருண்மை உடையது. வாழ்வியலை விளக்குவதற்கு முன்னர் இருத்தல், வாழ்தல் என்ற சொற்களின் பொருளை விளங்கிக் கொள்ள வேண்டும். ''**அவர் இருக்கிறார்**'' என்று கூறப்படும்பொழுது, யாருக்கும் பயனின்றி சும்மாவே இருந்து வருகிறார் என்பது பொருள். வாழ்வின் இலக்கணமாக மதிக்கப்பெறும் இந்நல்லியல்புகள் மனிதனை, தலையாய மனிதனாக உயர்த்தவல்லன. வாழ்வின் இலக்கணமே வாழ்வியல் எனப்படும். வாழ்வியல் கோட்பாடுகளை வரையறை செய்து வழங்கிய சான்றோர்களில் முதல் நிலையில் வைத்து எண்ணப் பெறுபவர்களில்

தமிழகத்தில் திருவள்ளுவரும் (கி.மு.50-கி.பி.50), ஆசியப் பேரொளி எனப் போற்றப்பெறும் புத்தர்பிரானும் (கி.மு.6 ஆம் நூற்றாண்டு) ஆவர். "கபிலவத்துவில் தோன்றிய புத்தர் பிரான் அரசமரபினர். அவர் காலத்துச் சமுதாயச் சீர்கேடுகளையும் மூடநம்பிக்கைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் கடுமையாகச் சாடிய புரட்சியாளர். சமுதாயச் சமத்துவத்திற்கு முதன்முதல் குரல் கொடுத்தவர்" (ப.156) என்று சோ.ந.கந்தசாமி குறிக்கப்படுகிறார். இஃது சமதர்மச் சமுதாயம் அக்காலத்தே விளங்கினமையைப் புலப்படுத்துகிறது. கணவன் மனைவி ஆகிய தலைமக்கள் அன்பும் அறனும் மேற்கொண்டு வாழ்தலே இல்வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். பழிச்செயலுக்கு அஞ்சுதல், பகுத்துண்டு வாழ்தல், இவர்தம் இயல்பு. தமிழ் முன்னோர், இறை, விருந்தினர், உறவினர் என்னும் இவருடன் தன் குடும்பத்தார் என்ற ஐவரையும் பேணி ஒழுகுதல் தலையாயக் கடமையாகக் கொண்டு வாழ்ந்தனர்.

**குடும்பம்**

ஒரு நாட்டின் அடிப்படை அலகாக விளங்குவது குடும்பம் என்னும் நிறுவனம். கணவன், மனைவி, மக்கள் என்பவரால் உருப்பெறுவது குடும்பம். ஆதலின், இந்நிறுவனம் வலிமையும் மாண்பும் உடையதாய் அமையின், நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் நலம் பயக்கும். எஞ்ஞான்றும் மனைவியிடம் இன்சொல் பகர்ந்து இனியனாய் நடத்தல், உண்மையுள்ளவனாக ஒழுகுதல், ஆளும் உரிமையினை முழுமையாக மனைவிக்கு வழங்குதல், கடமையாகும். கணவனிடம் என்றென்றும் நம்பிக்கைக்கு உரியவளாக (கற்பு) நடத்தல் (கோபால், ப.20), சுற்றத்தாரைப் பேணுதல், குடும்பப் பொருளாதாரத்தை வளர்த்தல், குடும்பக் கௌரவத்தினைக் காத்தல், சமுதாய நன்மதிப்பினைப் பெறுதல் முதலியவை ஆற்றவேண்டிய கடமைகளையும் புத்தர்பிரான் கூறியுள்ளார். திரிகடுகம் எனும் அறநூல் இயற்றியவர் நல்லாதனார். மேற்படி கருத்தாக்கங்கள் பற்றி ஒருசில பாடல்களில் இவர்தம் நூலில் கையாண்டுள்ளார். அவை பற்றி இங்கு விளக்கப்படுகின்றது.

திரிகடுகத் தில் மனித வாழ்வில் ஆண், பெண் இருபாலரும் கடைப்பிடிக்கக் வலியுறுத்தப்படும் பொருள்கள் பின்வரும் தலைப்புக்களாகப் பிரித்து அமைத்துக் கொள்ளல் தகும்.

1. இறவா புகழுடம்பு (16) (அறச்செயல்)
2. தெப்பம் கைவிட்டவர் (17) (கல்வி தவறவிட்டவர்)
3. கெடுதி தவிர்த்தல் (24) (கணிகைவாயின் சொல்)
4. பேதைமை (3) (கற்றறியாதார் செயல்)
5. அருந்ததி (மனையாள் கற்பு) (பா.1)

### 1. இறவா புகழுடம்பு

இறவா உடம்பு பெறுதற்கு மூன்று நெறிகளை (வழிகளை) வலியுறுத்துகின்றது பின்வரும் பாடல்.

*மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்*
*பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும் உண்ணுநீர்*
*கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்*
*சாவா உடம்பெய்தி னார்.* (திரி., பா.16)

என்பது அப்பாடல். அதாவது மண்ணின் மேல் சிறந்த புகழை நிறுத்தியவனும்; மாசில்லாச் சீர்மை உடைய கற்புடையாளை மனையாளாய்ப் பெற்றவனும்; உண்ணும் நீருக்குக் குறைவில்லாதவாறு கிணறுகள் தோண்டித் தந்தவனும் சாவா உடம்பு எய்துவர் என்று விளம்புகின்றது. கூவல் — உண்ணும்நீர் கிணறு என்பது பொருள். கிணறு உண்டாக்குபவர் இறந்தும் இறவாத புகழுடம்பைப் பெற்றவராவார் என்பது கருத்து. மேற்படி பாடல் மூன்று அறச்செயலைப் புரிந்தோர் இம்மண்ணில் வான்புகழ் எய்துவர் என்பதாகும்.

திருவள்ளுவர் ஆடவர் மனையாளோடு இல்லிருந்து வாழ்க்கை நடத்துவதற்கு "இல்வாழ்க்கை" அதிகாரத்தில் வலியுறுத்துவதுபோல் "வாழ்க்கைத் துணைநலம்" அதிகாரத்தில்,

*பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்*
*திண்மையுண் டாகப் பெறின்.*

என்ற குறளில் (குறள்.54) கற்பின் வலிமையினை வலியுறுத்துகிறார். "மனைவியிடம் கற்பு என்னும் கலங்கா நிலைமை ஏற்பட்டிருக்குமானால், பெண்மையினும் மேம்பட்டனவாய பொருள்கள் எவை உள்ளன?" (ப.26) என்று உரையாசிரியர் கா.சுப்பிரமணியம் பிள்ளையின் உரை குறித்தற்பாலது. மனையாள் கற்பு நெறி போற்றப்படுகின்றது.

**2. தெப்பம் கைவிட்டவர் (கல்வி தவறவிட்டவர்)**

உலகில் வாழும் ஒருவர் தனக்கு மூப்பு வந்தபோதும், துறவறத்தை அடைதற்கு அஞ்சி நீங்கியபோதும், கற்புடைய தன் மனைவியை பூப்பெய்திய காலத்தே அடையாத கணவனும் (தமிழர் மரபு) கல்வியாகிய தெப்பத்தைக் கைக்கணின்றும் தவறவிட்டவராவார். இதனைப் பின்வரும் பாடல்

*மூப்பின்க ணன்மைக் ககன்றானுங் கற்புடையாட்*
*பூப்பின்கட்சாராத் தலைமகனும் — வாய்ப்பகையுட்*
*சொல்வென்றி வேண்டு மிலிங்கியு மிம்மூவர்*
*கல்விப் புணைகை விட்டார். (திரி., பா.17)*

என்கிறது. துன்பத்தில் அழுந்தும் நிலையெய்துவர். இலிங்கி — துறவி, தவக்கோலந் தாங்கியவன் என்றும், தார்க்கிகன் என்றும் உரைத்தலுமாம், துன்பக் கடலினின்றும் கரையேறுதற்குப் புணையாகிய கல்வி இவர்கட்கு அப்பயன் விளைத்திலாமையின் கல்விப்புணை கைவிட்டார் என்பது கருத்து. இதனைத் தொல்காப்பியர் கற்பியலில் (நூ.46) சுட்டிக் காட்டுகிறார்.

*பூப்பின் புறப்பா டீராறு நாளும்*
*நீத்தகன் றுறையா ரென்மனார் புலவர்*
*பரத்தையிற் பிரிந்த காலை யான.*

என்று பூப்பு — மாதவிடாய். பூத்தபின் மூன்றுநாள் சொற்கேட்கும் வழியுறைதலும், பன்னிருநாள் கூடியுறைதலும் வேண்டும் என்கிறார். இதற்கு உரையாசிரியர் இளம்பூரனர், "பரத்தையர் சேரியானாயினும் பூத்தோன்றி மூன்றுநாள் கழித்த பின்பு பன்னிரண்டு நாளும் நீங்குதல் அறமன்று என்றும்; இதனாற் பயன் என்னையெனின் அது கருத் தோன்றுங்காலம்" (கௌமாரீஸ்வரி, ப.311) என்று உரையெழுதுகின்றார். மேற்படி நூற்பாவிற்கு கருத்துரையெழுதும் தமிழண்ணல், "தலைவி மாதப் பூப்படையும் காலத்திற்குப் பின்வரும் பன்னிரண்டு நாளும் தலைவன் அவளைப் பிரிந்து பரத்தையரை நாடிச் செல்ல மாட்டான். ஏனெனில் அது கருவுருவாகும் காலம் என்பது உட்பொருள்" (தமிழண்ணல், ப.385, தொல். மூலமும் கருத்துரையும்) என்கிறார். இஃது பண்டையச் சமூகம் பின்பற்றிய நெறி எனக் கொள்ளல் தகும்.

**3. கெடுதி தவிர்த்தல் (கணிகைவாயின் சொல்)**

தம் நலம் விலை கொடுப்பார் யாவருக்கும் விற்பது அல்லது அதற்கு ஆவார் ஆகாதார் என்னும் வரைவு இல்லாத மகளிர் (பொதுமகளிர் / வேசை) இயல்புப் பற்றி "அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்" (குறள்.911) என்று கூறும் பரிமேலழகர் ஒருவனை அன்பு பற்றி விழையாது பொருள் பற்றி விழையும் மகளிர் எனச் சுட்டிக் காட்டுகிறார். "ஆழ்ச்சிப் படுக்கும் அளறு" என்பது உயிர்களைத் தன்னுள்ளே (அறியாது இறங்கினாரை) அழுந்தப் பண்ணுகின்ற நரகம் ஆகும். காணுதற்குத் தக்க, மென்தோள்களையுடைய வேசையின் வாயிலிருந்து வரும் இனிய பேச்சு (மொழி), தூண்டிலினிடத்து மீனுக்கு இரையாக அதன் முள்ளை மறைத்து வைக்கப்பட்டப் பொருள், மனவைரங் கொள்ளும் பகைவர்களின் வணக்கம் ஆகிய இம்மூன்றும் உயிர்களைத் தன்னுள்ளே அழுந்தப் பண்ணுகின்ற நரகம் போன்றதாகும். இதனை நல்லாதனார்,

*காண்டகு மென்றோட் கணிகைவா யின்சொல்லும்*

*தூண்டிலி னுட்பொதிந்த தேரையும் — மாண்டசீர்க்*
*காழ்த்த பகைவர் வணக்கமு மிம்மூன்றும்*
*ஆழ்ச்சிப் படுக்கு மளறு.* (திரி., பா.24)

என்ற பாடலில் விளக்குகிறார். காழ்த்த பகைவர் — மனவைரங் கொண்டவர். அளறு — நரகம்.

**4. பேதைமை மூன்று செயல்கள்**

பேதைமை என்னும் பதத்திற்கு அறிவின்மை, ஏழைமை என்று கழகத் தமிழ் அகராதி பொருள் உரைக்கிறது (ப.709). அன்னை தமிழ் இலக்கிய வகைமைகளில் ஒன்றான சிற்றிலக்கியத்தில் உலா என்னும் இலக்கிய வகையில் வழங்கப்படும் உயர் வழக்குச் சொல் "பேதை" என்பதற்கு "எதையும் பகுத்தறிந்து பார்த்துச் செயல்படத் தெரியாத தன்மை உடைய நபர்; எதையும் நம்பிவிடும் நபர்" (8.ப.1021) என்றும் ஆங்கிலத்தில் (*person having no discernment; person who is naive*) என்றும் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. இஃது உணரச் செய்வதாவது பேதை என்னும் பெண்ணுக்கு 5 வயது முதல் 7 வயது வரை உள்ள இளம்பெண் எனத் தமிழ் உலகியலில் அறியப்படும். அதாவது எதையும் ஆராய்ந்து அறியும் திறனற்றநிலை என்பது பொருள். ஆனால் திரிகடுகம் 3 ஆம் பாடல் தரும் கருத்துக்கள் மூடரோடு சேர்ந்திருப்பதும், கற்புடை மனைவியை அடித்தலும், கல்வி கற்றறியாதவரான அறிவீனரை வீட்டுள் அழைத்துச் செல்லுதலும் கேட்டைத் தருவனவாகும் என மூன்று செயல்களையும்

*கல்லார்க் கின்னா வொழுகலுங் காழ்கொண்ட*
*இல்லாளைக் கோலாற் புடைத்தலும் — இல்லஞ்*
*சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்*
*அறியா மையான்வருங் கேடு.* (திரி., பா.3)

என்ற வெண்பாவில் ஆசிரியர் நல்லாதனார் சுட்டிக் காட்டுகிறார். இதனை பொய்யாமொழிப் புலவர், பொருட்பாலில் "44.குற்றங் கடிதல்" அதிகாரத்தில் "காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனப்பட்ட ஆறு குற்றங்கள் அரசன் தன்கண் நிகழவிடாமல்" (9. பரிமேலழகர் உரை, ப.177) பாதுகாத்தல் வேண்டும் எனப் பரிமேலழகர் விளக்கமளிக்கிறார். மதம் — செருக்கு, பெற்றதைப் பெரிதாக மதிப்பது.

**5. அருந்ததி மூன்று செயல்கள்**

ஒருவன் அருந்ததி போன்ற கற்பினையுடைய மகளிரது தோளின் சேரக்கையும், குற்றமற்ற மாட்சிமை பொருந்திய தொல்குடியின் பிறப்பின்கண் மாட்சிமையுற்றாரது தொடர்பும், சொல்லும் சொற்களினிடத்தே குற்றங்களை நீக்கவல்ல நூற்கேள்வியையுடையாரித்துக் கொண்ட புணை நட்பும் ஆகிய இந்த மூன்றும் அவனுக்கு சுக்கு, திப்பிலி, மிளகு என்னும் மூன்று கார்ப்புடைய மருந்துப் பொருள்கள் ஆகும். இதனை பின்வரும் வெண்பா,

*அருந்ததிக் கற்பினார் தோளுந் திருந்திய*
*தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியுஞ் — சொல்லின்*
*அரிலகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றுந்*
*திரிகடுகம் போலு மருந்து.* (திரி., பா.1)

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. உடற் பிணியை அகற்றி இன்பஞ் செய்தல் போல் இந்நூற்பாவிடத்தே கூறப்படும் மூன்று பொருள்களும் உயிர்ப்பிணியாகிய அறியாமையைக் நீக்கி இன்பஞ் செய்வனவாம் என்பது கருத்து. அருந்ததி — வசிட்டன் மனைவி; கற்பிற்கு எடுத்துக் காட்டானவள். அரில் அகற்றும் — குற்றம் நீக்கும். குற்றமில்லாத அருந்ததியின் கற்பு ஒக்கும் கற்பினள் என்பதற்கு சிலப்பதிகாரத்தின் மங்கல வாழ்த்துக் காதையில் "தீதிலா வடமீனின் றிறமிவள் திறம்" (1:26) என்பதும்; சீவகசிந்தாமணியின்

கனகமாலையார் இலம்பகத்தில், "அருந்ததிக் கற்பினாளை யடிபணிந் தவனுங் கண்டான்" (7:1729/4) என்பதும் கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்தில் "சீலமின்ன தொன்ற ருந்ததிக் கருளிய திருவே" (10:16-1)) என்பதும் கூறப்பெற்றுள்ளமையைக் காணலாம்.

**முடிவுரை**

உலக வாழ்வில் இருபாலரும் ஒழுகவேண்டிய செய்கைகள் பற்றிச் சிறப்புத் தரும் நல்லொழுக்கங்களை ஒப்ப நல்ல வழியில், மனிதர்கள் விதியாகப் பேணல் வேண்டும் என்பதும், தீயஒழுக்கங்கள் கைவிடப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. சுக்கு, திப்பிலி, மிளகு எனும் மருந்துப் பொருள்கள் எவ்வாறு மனித உடலின் உள்ளுறுப்புகளுக்கு வரும் பிணியினை அறுக்குமோ அதன்படி ஒவ்வொரு பாடலிலும் மூன்று ஒழுக்க விதிகளை பகுத்துத் தந்திருக்கின்றது திரிகடுகம் என்னும் அறநூல். இந்நூலில் பயிலப்பட்டுள்ள ஒழுக்க விதிகளைப் பின்பற்றினோர் தம் வாழ்வில் நன்மை கிட்டும் என்பது திண்ணம்.

**துணைநூற் பட்டியல்**


கந்தசாமி, சோ.ந., *செவ்வியல் இலக்கிய ஆய்வுகள்.* சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம், முதற்பதிப்பு, 2011.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.), *தொல்காப்பியம் பொருளதிகாரம் (இளம். உரை).* சென்னை: சாரதா பதிப்பகம், 14 ஆம் பதிப்பு, 2016.:ப.311.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.), *நல்லாதனார் இயற்றிய திரிகடுகம் மூலமும் உரையும்.* சென்னை: சாரதா பதிப்பகம், 6 ஆம் பதிப்பு, 2012.

கோபால், சி.பா. (iii. தீர்க்க நிகாயம்-51) *புத்தர் பொன்மொழிகளும் மானிட வாழ்வியல் சிந்தனைகளும்.* கோயம்புத்தூர்: இலட்சுமி பதிப்பகம், 2001:20 (51. கணவன்-மனைவி: மனைவியிடம் மதிப்பு காட்டுவது; அவளோடு இணங்கியிருப்பது; பரஸ்திரியை நாடாதிருப்பது; மனைவியிடம் பொறுப்பு கொடுப்பது; அவளுக்கு ஆடையணிகள் தருவது — இந்த ஐந்து வழிகளின் மூலம் மனைவியைக் கணவன் போற்றல் வேண்டும்).

கோபாலகிருஷ்ணமாச்சாரியார், வை.மு. (உ.ஆ.). *கம்பராமாயணம்: அயோத்தியா காண்டம்.* சென்னை: உமா பதிப்பகம், 3 ஆம் பதிப்பு, 2017.

சண்முகம் பிள்ளை, மு. (ப.ஆ.), *தமிழ்-தமிழ் அகர முதலி* (1985). தமிழ்நாட்டு அரசு: தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 4 ஆம் மறுபதிப்பு, 2022:689 (நெறி). 780 (புணை)

சிங்காரவேலு முதலியார், ஆ., *அபிதான சிந்தாமணி (செம்பதிப்பு).* சென்னை: சாரதா பதிப்பகம், 16 ஆம் பதிப்பு, 2018.

சுப்பிரமணியம் பிள்ளை, கா., *திருக்குறள் மூலமும் உரையும்.* சென்னை: பூம்புகார் பதிப்பகம், முதற்பதிப்பு, 2012.

தமிழண்ணல் (உ.ஆ.) *தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும்.* மதுரை: செல்லப்பா பதிப்பகம், 6 ஆம் பதிப்பு, 2021:385. நூ.1133.

தமிழமுதன், புலவர் (உ.ஆ.). *சீவகசிந்தாமணி (பகுதி-2).* சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம், முதற்பதிப்பு 2016 (கனகமாலையார் இலம்பகம்-7:1729/4).

பாலசுப்பிரமணியன், சிற்பி. & நீல பத்மநாபன், *தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி-1.* சென்னை: சாகித்திய அகாதெமி, 3 ஆம் பதிப்பு, 2019.

பொற்கோ, *ஆராய்ச்சி நெறிமுறைகள்.* சென்னை: ஐந்திணைப் பதிப்பகம், 7 ஆம் பதிப்பு, 2016.

ராமகிருஷ்ணன், எஸ். (ப.ஆ.), *க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி — தமிழ்-தமிழ்-ஆங்கிலம்.* சென்னை:க்ரியா, மறுபதிப்பு, 2018:1021

வேங்கடசாமி நாட்டார், ந.மு. *சிலப்பதிகாரம்: மூலமும் உரையும்.* சென்னை: ராமையா பதிப்பகம், 2005:50.

ஜெயக்குமார், சி. (ப.ஆ.), *திருக்குறள் மூலமும் உரையும் (பரிமேலழகர் உரை).* சென்னை:அருணா பப்ளிகேஷன்ஸ், முதற்பதிப்பு, 2020:177.

***References***

Kandasamy, S.N., *Sevviyal Ilakkiya Aaivugal.* Chidambaram: Meyyappan Pathippagam, First Edition, 2011.

Gowmaariswari, S. (Ed.), *Tholkappiyam Porulathikaram (Ilam. Urai).* Chennai: Saratha Pathippagam, Fourteenth Edition, 2016.:ப.311.

Gowmaariswari, S. (Ed.), *Nallathanar Iyatriya Thirikadugam Moolamum Uraiyum.* Chennai: Saratha Pathippagam, Sixth Edition, 2012.

Gopal, C.P. (III. Theerkka Nikayam -51) *Buddhar Ponmozhikalum Maanida Vazhviyal Sinthainaikalum.* Coimbature: Lakshmi Pathippagam, 2001:20

Gopalakrishnamaachariyar, V.M. (Ed.). *Kambaramayanam: Ayothiya Kaandam.* Chennai: Uma Pathippagam, Third Edition, 2017.

Shanmugam Pillai, M. (Ed.), *Tamil-Tamil Agara Muthali* (1985). Tamilnattu Arasu: TamilNadu Paadanool Matrum Kalviyiyal Panikal Kazhagam, Revised Fourth Edition, 2022:689 (நெறி). 780 (புணை)

Singaravelu Mudaliyar, A., *Abithana Sinthamani (Sempathippu).* Chennai: Saratha Pathippagam, Sixteenth Edition, 2018.

Subramaniyam Pillai, K., *Thirukkural Moolamum Uraiyum.* Chennai: Poompuhar Pathippagam, First Edition, 2012.

Tamilannal (Ed.) *Tholkappiyam Moolamum Karuthuraiyum.* Madurai: Chellappa Pathippagam, Sixth Edition, 2021:385. Song.1133.

Tamizhamuthan, Pulavar (Ed.). *Sivagasinthamani (Part-2).* Chidambaram: Meyyappan Pathippagam, First Edition 2016 (Kanagamalaiyar Ilambagam-7:1729/4).

Balasubramanian, Sirpi. & Neela Padmanaban, *Tamil Ilakkiya Varalar Volume-1.* Chennai: Sahitya Academy, Third Edition, 2019.

Porko, *Aaraichi Nerimuraikal.* Chennai: Iynthinai Pathippagam, Seventh Edition, 2016.

Ramakrishnan, S. (Ed.), *Kiriyavin Tharkala Tamil Agarathi — Tamil-Tamil-English.* Chennai:Kiriya, Reprint, 2018:1021

Venkatasamy Nattar, N.M. *Silappathikaram: Moolamum Uraiyum.* Chennai: Ramaya Pathippagam, 2005:50.

Jayakumar, C. (Ed.), *Thirukkural Moolamum Uraiyum (Parimelalagar Urai).* Chennai: Aruna Publications, First Edition, 2020:177.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com